# விமானப்படை உதவியுடன் முன்னேறிய ராணுவம் மீது வங்காலையில் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்

நேற்று முன்தினம் மன்னார் மாவட்டத்தில் உள்ள வங்காலையில் ஸ்ரீலங்கா ராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உக்கிரமான மோதல் நிகழ்ந்துள்ளது.

காலை எட்டு மணியளவில் வங்காலையில் உள்ள முகாமில் இருந்து ராணுவத்தினர் நானாட்டான் பகுதியை நோக்கி முன்னேறத் தொடங்கினர். இவர்களுக்கு உதவியாக இரண்டு பொம்மர்களும் ஒரு ஹெலிகப்டரும் முன்னேற ஆயத்தமான பகுதிகளை நோக்கி தாக்குதலை நடாத்தின.

வான்தாக்குதல் தொடர இராணுவம் முன்னேற ஆரம்பித்தது. மூன்று கவசவாகனங்கள் இரண்டு ட்ரக் வண்டிகள் என்பவற்றில் இராணுவத்தினர் சென்றபோது விடுதலைப்புலிகள் வழிமறித்து கடும் தாக்குதலை தொடுத்தனர்.

பலமணிநேரமாக நடைபெற்ற கடும் மோதலைத் தொடர்ந்து, இராணுவம் தனது முன்னேறும் முயற்சியைக் கைவிட்டு பலத்த இழப்புகளுடன் வங்காலை முகாமிற்கு பின்வாங்கிச் சென்றனர்

புலிகளின் தரப்பில் லெப்டினன் (அன்ரனிபேர்னாட்) பனங்கட்டிக்கொட்டு மன்னார் வீரமரணமடைந்தார். (71)


பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 33 பிரமோதூத மார்கழி 15 (30-12-1990) ஞாயிறு


## யாழ்ப்பாணத்திலும் காகித உற்பத்தி பரீட்சார்த்த முயற்சி வெற்றி!

யாழ்ப்பாணத்தில் கழிவு தாள்களில் இருந்து காகித தாள் உற்பத்தியாக்கு முறை யொன்று பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டு வெற்றிகாணப்பட்டுள்ளது. கழிவு கடதாசியை சுண்ணாம்பு கலந்த நீரில் ஊறவைத்து வரும் கலவையை அரைத்து எடுத்து பின்னர் அக்கலவைக்கு குறிப்பிட்ட சில இரசாயன கலவை சேர்த்து பின்னர் பசையிட்டு அழுத்தி எடுத்து உலரவைப்பதன் மூலம் இக்கடதாசி உற்பத்தியாக்கப்படுகிறது.

கடதாசி தட்டுப்பாடான இவ்வேளையில் இதற்கு பெரும் சந்தைவாய்ப்பு இருப்பதாகவும், வர்த்தக ரீதியாக உற்பத்திகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள்முரசொலிக்குத்தெரிவித்தன. (74)

# காயமுற்ற போராளிகளை கைது செய்வது மனிதாபிமானமற்ற செயல்

## தமிழக அரசு மீது புலிகள் கண்டனம்

தமிழீழ மக்களின் சுதந்திர இயக்கமாகிய விடுதலைப்புலிகளுக்கு, தார்மீக அரணாக நிற்கவேண்டிய தமிழகஅரசு, சிங்கள இனவாத ஆட்சியாளர்களுக்கு துணை போவது போல தமிழர்விரோத நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது என்று தமிழீழ விடுதலைப்புலகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் வெளியிட்ட அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடபபட்டுள்ளதாவது;

ஸ்ரீலங்கா - தமிழீழப் போரின் விளைவாக எமது போராளிகள் பலர் படுகாயமடைந்தனர். இவர்களில் சிலர் சிக்கலான காயங்களுக்கு உள்ளானதால், அவர்களுக்குப் பாதுகாப்பான முறையில் தகுந்த சிகிச்சை தமிழீழத்தில் அளிக்கமுடியவில்லை.

இவர்களின் பரிதாபமான நிலைமை பற்றி நாம் தமிழக முதல்வருக்கு அறிவித்திருந்தோம். இது பற்றி மத்திய அரசுடன் கலந்தாலோசித்த தமிழக அரசு இந்தப் போராளிகளைத் தமிழ் நாட்டில் சிகிச்சை பெற அனுமதித்தது.

இவ்வாறு தமிழக அரசால் வரவழைக்கப்பட்ட காயமுற்ற, ஊனமுற்ற விடுதலைப் போராளிகளை இன்று தமிழக அரசு ஆஸ்பத்திரிகளில் வைத்து கைது செய்து காவலில் வைத்துள்ளது. இந்த அநீதியான நடவடிக்கையானது எமது விடுதலை இயக்கத்திற்கும், தமிழீழ மக்களுக்கும் செய்யப்பட்ட நம்பிக்கைத் துரோகமாகவே நாம் கருதுகிறோம்.

விடுதலைப் புலிகளால் தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கிற்கு ஆபத்து ஏற்பட

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஷெல்லுடன் விளையாட்டு இருவர் காயமடைந்தனர்

கடந்த காலங்களில் மேற்கொளளப்பட்ட இராணுவத் தாக்குதல்களினால் ஏவப்பட்ட சிறிய ரக ஷெல் ஒன்றினை விளையாட்டாக எடுத்து நிலத்தில் உராஞ்சிய ஷெல் வெடித்ததில் இருவர் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்றுமாலை 2 மணியளவில் சங்குவேலியில் இடம் பெற்றது இதில் கனகரத்தினம் மடுப்பிரகாஸ் (17) தனது வலது கையில் 3விரல்களை இழந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலை

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா - தாண்டிக்குளம் வீதியை திறக்க முயற்சி

வவுனியா, தாண்டிக்குளம் வீதியினை திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப் ... இவ்வீதி மூடப்பட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து பயணிகளும், வாகனங்களும் பூந் ...

தமிழக முதல்வர் சொல்கிறார்

## தமிழக கரையோரத்தை பார்க்க அதிகாரிகள் வரலாம்!

தமிழ்நாட்டின் கரையோரப்பகுதிகளில் சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகள் பேணப்படுகின்றதா என்பதை அறிய மத்திய அரசின் அதிகாரிகள் தமிழ்நாடு வருவது குறித்து எந்தவித ஆட்சேபனையும் இல்லை என தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தமிழக கரையோரங்களில் இலங்கைத் தமிழ் போராளிகளின் நடமாட்டம் காணப்படுவதால் அங்கு சட்டம் ஒழுங்கு குலைந்துள்ளதாக

— 4 ஆம் பக்கம் பார்க்க

## உயர் அதிகாரிகள் இடமாற்றம்?

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள உயர் அதிகாரிகள் மட்டத்தில் அடுத்த ஆண்டு மாற்றங்கள் இடம்பெற விருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

யாழ் மாவட்டத்தில் உயர் பதவியில் இருப்பவர் ஒருவருக்கு கொழும்பில் முக்கிய பதவி ஒன்று வழங்கப்படவுள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நிர்வாகி ஒருவர் யாழ் மாவட்டத்திற்கும் யாழ் மாவட்டத்தில் உள்ள உயர்

—04 ஆம் பக்கம் பார்க்க

கேரதீவு - சங்குப்பிட்டி படகுச்சேவை

## பயணியிடம் லஞ்சம் பெற்ற படகோட்டி வேலை நீக்கம்!

கேரதீவு - சங்குப்பிட்டி படகுச்சேவையில் கடமையி ... பட்டுள்ளார்.

இத்தகைய சம்பவங்கள் ...

ஷெல் வெடித்ததில் இருவர்
படுகாயமடைந்தனர்.

போதனா வைத்தியசாலை

— 4 ஆம் பக்கம் பார்க்க

வீதியினை திறப்பதற்கு வேண்
டிய நடவடிக்கைக எடுக்கப்
படடு வருகின்றது.
யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து
கடந்த ஆறுமாத காலமாக

வவுனியாவிலிருந்து பயணி
களும், வாகனங்களும் பூந்
தோட்டம் வழியாகவே இது
வரைகாலமும் பயணம்
செய்து வந்தனர். (11)

கேரதீவு - சங்குப்பிட்டி
படகுச்சேவையில் கடமையி
லீடுபடும் ஒருவர் பயணி ஒரு
வரிடம் லஞ்சம் வாங்கிய குற்
றத்திற்காக வேலை நீக்கம்
செய்யப்பட்டுள்ளார்.
நத்தார் தினத்தன்று பயணி
ஒருவரின் பொதிகளை படகில்
முதலில் கொண்டு சென்று
ஏற்றுவதற்காக மேற்படி பட
கோட்டி ஒரு தொகை
பணத்தை பெற்றுக் கொண்
டார். பணத்தை இவர் பெற்
றுக் கொண்டபோது இவர்
கண்டுபிடிக்கப்பட்டு விடு
தலைப்புலிகள் பூநகரி - பள்ள
மடு பிரதேசப் பொறுப்பாளரி
னால் வேலைநீக்கம் செய்யப்
பட்டுள்ளார்.
இத்தகைய சம்பவங்கள்
தொடர்ந்தால் கடும்
நடவடிக்கை எடுக்கப்படும்
என அறிவிக்கப்பட்டுள்ளது.
(ப-35)

# வவுனியாவில் இரு கடைகளில் மனித எலும்புக் கூடுகள் !

பூட்டப்பட்ட கடையொன்
றில இருந்து இரு மனித
எலும்புக் கூடுகள் மீடகப்பட்
டுள்ளன.
வவுனியா காமினி சிங்கள
மாகவித்தியாலத்திற்கு அரு
கில்உள்ள பூட்டப்பட்ட கடை
யொன்றில் இருந்தே இந்த
எலும்புக்கூடுகள் மீட்கப்பட்
டுள்ளன.
காமினி மகாவித்தியாலயத்
தில் இராணுவத்தினர் தற்
பொழுது நிலை கொண்டுள்
ளனர் கடந்த இரு மாதம்
களுக்கு முன்னர் குறிப்பிட்ட
கடைப்பகுதிக்குஇராணுவத்தி
னர் வந்து சென்றதாகவும்
அப்போதுஇப்பகுதியில் கைது
செய்யப்பட்ட சிலரை இவர்
கள் அழைத்துச் சென்றதாக
வும் அப்பகுதி மக்கள் தெரி
வித்தனர் (74)

# எக்ஸ் - கதிரியக்க இயந்திரம் வழங்க அமைச்சு மறுப்பு

யாழ் போதனா வைத்திய
சாலைக்கு சுகாதார அமைச்சு
ஒரு புதிய எக்ஸ்-கதிரியக்க
இயந்திரத்தை வழங்குவதாக
முன்னர் உறுதி அளித்
திருந்த போதிலும் தற்போது
அதனை வழங்க அமைச்சு
மறுத்து வருவதாக தெரிவிக்
கப்படுகிறது.
இவ்வைத்தியசாலையில்
நான்கு எக்ஸ்-கதிரியக்க
இயந்திரம் இருந்த போதி
லும், தற்பொழுது அவற்றில்
ஒன்று மட்டுமே இயங்க கூடிய
நிலையில் உள்ளது இயங்க
கூடிய நிலையில் உள்ள ஒரு

— 4 ஆம் பக்கம் பார்க்க

எமது அரசியல் விமர்சகர்
க. மா. இராசையா
எழுதும்
''ஏழ மறுக்கும்
இருதயுகம்''
கட்டுரைத் தொடரின்
இரண்டாம் பகுதியை
நாளை வழங்குகிறோம்.

## யாழ் போதனா வைத்தியசாலையில்

# சிகிச்சை பெறும் நாற்பது வீதமானோர் இராணுவ நடவடிக்கையில் காயமடைந்தவர்கள்

யாழ் போதனா வைத்திய
சாலையில் நவம்பர் மாதம்
முதல் நேற்றுவரை வார்ட்டு
களில் அனுமதிக்கப்பட்ட
3309 நோயாளர்களில் 40வீத
மானோர் இராணுவத் தாக்கு
தல்களினால் காயமடைந்த
வர்களாவர்.
மற்றும் 20 வீதமான
நோயாளர்கள் பல்வேறுபட்ட
நோய்களினால் அனுமதிக்கப்
பட்டு சிகிச்சை பெற்று வரு
கின்றவர்களாவர்.
ஏனைய 30 வீதமான
வார்ட்டுகளில் சிகிச்சைக்
குரிய நோயாளிகள் அனுமதிக்
கப்படவில்லையென ஆஸ்பத்
திரி வட்டாரங்கள் தெரிவித்
தன.
அவசர சிகிச்சை நோயா
ளர்களே தற்போது யாழ்
போதனா வைத்திய சாலை
யில் அனுமதிக்கப்பட்டு வரு
கின்றனர். என்பது இங்கு
குறிப்பிடத்தக்கது.
(ப-11)

## 5 லட்சம் ரூபாவுக்கு மேல்

# யாழ் கூட்டுறவு ஊழியர்கள் கிழக்கு அகதிகளுக்குநிதியுதவி

யாழ் மாவட்ட கூட்டுறவு
சங்கங்களின் ஊழியர்களும்,
கூட்டுறவாளர்களுப் சோந்து
சுமார் ஐந்தரை லட்சத்துக்
கும் அதிகமான தொகையை
கிழக்கு மாகாண அகதிக
ளுக்கு அன்பளிபபாக வழங்
கினர்.
யாழ் பல்கலைக்கழக
கைலாசபதி அரங்கில் நேற்று
இடம் பெற்ற வைபவம் ஒன்
றில் வைத்து இந்த நிதி
வழங்கப்பட்டது.
இவ்வைபவத்தில் உரை
யாற்றிய விடுதலைப்புலிகள்
மக்கள் முன்னணி யாழ்
மாவட்டப் பொறுப்பாளர்
திரு. ராஜன் பேசுகையில்
தற்போதைய நெருக்கடியான
காலகட்டத்தில் கூட்டுறவுச்

— 4 ஆம் பக்கம் பார்க்க

போற்றி அருளுக - 8

# பொய்கையிலே பாய்ந்த பூங்கொடியார்



தாமரைப் பொய்கை அவர்களுக்காகக் காத்துக் கொண்டு கிடக்கிறது. மார்கழி மாதம்; பனிக் குளிர் நேரம்; காரிருள் வேளை; கதிரவனின் உச்சிப்பொன்முடி தொடுவான் விளிம்பிலே தோற்றங்காட்டத் தயாராகிறது. ஆடாமல் அசையாமல் நின்ற பொய்கை நீர் அமைதியாய்க் கிடக்கிறது.

நீராட வந்த பாவையர்கள், 'தடால்' என்று பாய்கிறார்கள், பொய்கை நீரின் உள்ளே. 'முகேர், முகேர்' என்று நீர் கிழிந்து கொடுக்கிறது. சிறுமியர் தண்ணீரைக் குடைந்து குடைந்து விளையாடுகிறார்கள். பாடிப்பாடி நீராடுகிறார்கள்.

''காதார் குழை ஆட,
பைம் பூண் கலன் ஆட,
கோதை குழல் ஆட,
வண்டின் குழாம் ஆட,
சீதப் புனல் ஆடி,
சிற்றம்பலம் பாடி,
வேதப் பொருள் பாடி,
அப்பொருள் ஆமா பாடி,
சோதி திறம் பாடி,
சூழ் கொன்றைத் தார் பாடி,
ஆதி திறம் பாடி,
அந்தம் ஆமா பாடி,
பேதித்து நம்மை
வளர்த்தெடுத்த
பெய்வளை தன்
பாதத் திறம் பாடி
ஆடேலோர் எம்பாவாய்.''

பூமலர்த் தோட்டப் புறத்தில் இருக்கிற பொய்கையிலே, தாமரை பூத்த தண்ணீரிலே அவர்கள் தோய்ந்து தலை முழுகிக்கொண்டு பாடுகிறார்கள். காமம் வைத்து ஆளும் தமது கண்களைச் சில கன்னியர்கள் மூடிக்கொள்கிறார்கள், ஏன்? கடவுளது நாமங்களைத் தமது நாவிலே வைத்து ஓதும் நோக்கத்துடன் தான்.

அப்பொழுது......

காலைக் கதிர் என்னும் கைகளை நீட்டி, கடல் விளிம்பிற் கோலச் செழுமைக் கொழுந்துகள் தீட்டி, கொலைக்களம் போல், நீலத் தொடுவான் நிறம் சிவப்பாக்கி நிமிர்ந்து விட்டான்...

யார்?

பகல் வானத்துப் பெருவிளக்காகிய சூரியன். அவன் பேரொளி விளக்கன். ஆனாலும் இன்னும் அவனுடைய ஆட்சி கிழக்கிலே முழுமையாக ஆரம்பமாகவில்லை. சில ஆயத்தங்கள் விண்வெளியிலே இப்பொழுதுதான் இலேசாக நடைபெறத் தொடங்குகின்றன.

நீராடல் நிகழ்ச்சியின் நடுவிலே, தியானத்தில்; ஆழ்ந்து

---

யாழ் பல்கலைக்கழகம்
இலங்கை.

## பதவிகளுக்கான விண்ணப்பங்கள்

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991.01 31 ஆம் தேதி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

1. ஒட்டுண்ணியியலில் / உடலமைப்பியலில் நிரந்தர / தற்காலிக சிரேட்ட விரிவுரையாளர் தரம் II விரிவுரையாளர் பதவிகள்.
2. ஒட்டுண்ணியியலில் / உடலமைப்பியலில் நிரந்தர / தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவிகள்.

குறிப்பு:

(அ) ஒட்டுண்ணியியலில் நிரந்தர / தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பதாரி மிருக - விஞ்ஞான மாணி / விலங்கியலில் விஞ்ஞான மாணிச் சிறப்புப் பட்டத்தைப் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) உடலமைப்பியலில் நிரந்தர / தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பதாரி பல் அறுவைச் சிகிச்சைமாணி / மிருக விஞ்ஞான மாணி / விலங்கியலில் விஞ்ஞானமாணிச் சிறப்புப் பட்டத்தைப் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத் திட்டம்:

சிரேட்ட விரிவுரையாளர் தரம் II: ரூபா 8000- 5×250- 9, 250/- மாதமொன்றுக்கு தற்காலிக சிரேட்ட விரிவுரையாளர் தரம் II: ரூபா 8,000/- (நிலையானது) விரிவுரையாளர்: ரூபா 4,500-10×200- 6,500/ மாதமொன்றுக்கு (மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் ரூபா 4,500/-க்கு மேலதிகமாக இரண்டு

---

## திருட்டு சர்வசாதாரணம்

மன்னார் உப்புக்குளம், மூர் வீதிப்பகுதிகளில் சனநடமாட்டம் குறைவாக உள்ளது. இதனால்களவுகள் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றன.

## ஆலயம் சேதம்

மன்னார் நானாட்டான் பகுதியில் அண்மையில் நடைபெற்றபொம்மர் தாக்குதலில் இந்து ஆலயம்ஒன்றுசேதமாகியது. (17)

CLASSES IN ENGLISH
TYPING
SCHOOL OF BUSINESS
ADMINISTRATION
16, 3 RD. CROSS ST,
JAFFNA.

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மீண்டும் பழைய இடத்தில் எமது நிறுவனம் இயங்குகின்றது புதுவருட, நத்தார் பண்டிகைகளையொட்டி விசேட மலிவு விற்பனையும் நடைபெறுகிறது. லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர், 249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 12187


### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12173

### கல்வி

G. C. E (O/L) இல் கட்டாயபாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் தொடர்வகுப்புக்கள் மூலம் 20 நாட்களிலிருந்து 1 மாதத்திற்குள் சாதாரண திறமைச் சித்திக்கும் ஒரு மாதத்திலிருந்து ஒன்றரை மாதத்திற்குள் விஷேடதிறமைச் சித்திக்கும் 24 வருட அனு

---




## 45-ம் நாள் நினைவு அஞ்சலி

வீர ஜனனம்: 03 — 05 — 1971



வீர மரணம்: 15 — 11 — 1990

### நவரத்தினம் பரம்சோதி (சுபராஜ்)

ஆற்றலும் அன்பும் அஞ்சா நெஞ்சும்
அமைந்த எம் மைந்த சோதியே
கூற்றுவன் உன்னைக் கூவியழைத்தானோ
ஐயனார் மைந்தனை அணைத்து நின்றானோ
நாட்டு விடுதலை நாடிய நம்பி
நம்பியிருந்தோரை மறந்தனை தம்பி
காலன் இல்லாக் காலமது
காலம் இல்லா மரணமது
புண்பட்டோம் உன்னை இழந்திங்
கண்பட்டதோ உனது காரியங்கள்
விண்கண்ட மைந்த வெற்றியுனக்கே
விடுதலை என்பது பல தலை வீழ்வா?
விதி இதுவென்றால் வெந்து பயன்என்ன?
தேறல் காண்போம் தேற்றுவாரின்றி.

சாந்தி!

சத்திபத்தை,
களபூமி,
காரைநகர்.

அப்பா, அம்மா,
சகோதரங்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

12170

## 6-ம் மாத இதய அஞ்சலி

மலர்வு:



உதிர்வு:

நீராடல் நிகழ்ச்சியின் நடுவிலே, தியானத்தில்; ஆழ்ந்து விட்ட சேயிழை ஒருத்தி, திகில்கொண்டு கூச்சல் இடு கிறாள்.

''என்ன, என்ன? என்ன மனோன்மணி''?
''பாம்பு, பாம்பு...''
''பயப்படாதே. எங்கே பாம்பு?''
''அதோ... அங்கே...''

''ஓகோ! பரவாயில்லை. அது நீர்ப்பாம்பு தான். எங்களை ஒன்றும் செய்யாது. அம்மையப்பர் அணியும் நல்ல பாம்பை ஞாபகப்படுத்த வந்த அப்பாவிப் பாம்பு. பாவம், போகட்டும்.''

வாட்கண்ணி கரையேறிவிட்டாள். என்றாலும் அவள் கண்கள் மூடி இருக்கின்றன. இயல்பான உணர்வுகள் அவளிடம் இப்பொழுது இல்லை. அவள் தன்வச மிழந்துவிட்டாள். அவசம் ஆகிவிட்டாள்.

மூடிய இமைகள் இப்போது திறக்கின்றன. ஆனா லும் கண்கள் குறிப்பாக எதையும் பார்க்கவில்லை; யாரையும் பார்க்கவில்லை. வாய் முணுமுணுத்துக் கொண்டு இருக்கிறது — மந்திரம் போல.

''தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.''

- 'சித்தமழகியான்'

---

ருந்து ஒன்றரை மாதத் திற்குள் விசேஷடதிறமைச் சித்திக்கும் 24 வருட அநு பவமுடைய ஆசிரியரி னால் கற்பிக்கப்படும்.

க ஆறுமுகநாதன் 10,
கச்சேரி கிழக்கு ஒழுங்கை
லோகேந்திரா வீதி,
சுண்டுக்குளி. 12189

---

யாளர் ரூபா 4,500/-க்கு மேலதிகமாக இரண்டு படிகளில்வைக்கப்படுவார், அதாவது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத் தில் ரூபா 4,900/- இல் வைக்கப்படுவார்.) தற் காலிக விரிவுரையாளர் (மருத்துவம்): ரூபா 4 900/- (நிலையானது) உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/- (நிலையானது) ஓராண்டிற்கு தற் காலிக உதவி விரிவுரை யாளர்: ரூபா 3,900/- (நிலையானது)

விண்ணப்பங்கள் இப் பல்கலைக் கழகத்தின் சிரேட்ட உதவிப் பதிவா ளரின் தாபனங்கள் அலு வலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் செய் யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பத்திற்கான வேண்டுகோளுடன் 23X10 ச.மீ அளவுடைய சுய முகவரியிட்டு, முத் திரையொட்டப் பெற்ற கடித உறை அனுப்பப் படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக் களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளில் பணி யாற்றும் விண்ணப்பதா ரிகள் தமது நிறுவனங்க ளின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண் டும்.

தெரிவு செய்யப்படும் வேட்பாளரின் சிறப்புத் தகைமைகளையும் / அனு பவத்தையும் கவனத்திற் கொண்டு அவர் பொருத் தமான சம்பளப் படியில் வைக்கப்படலாம்.


-பதிவாளர்

யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990.12.29

12191

---

| மலர்வு: | | உதிர்வு: |
|---|---|---|
| 26 | | 05 |
| — | | — |
| 03 | | 08 |
| — | | — |
| 1980 | | 1990 |



## செல்வன் தெ. சுவேந்திரன்

(ஐயர்)

ஐயரே! எம் தெய்வமே! பாதகர் இப் பாரினில் இருந்து உன்னைப் பிரித்து ஆறுமாதங்கள் உருண்டோடி விட்டதே! இப்பாரினில் பாதை தெரியாமல் பரிதவிக்கின்றோமே! நீயின்றி அவனியில் ஆறுதலின்றி கலங்குகின்றோமே! இனி எங்கே உன் புன்முகத்தை காணப்போகின்றோம்! உன் ஆத்மா இறைவனடியில் சாந்தியடைய என்றென்றும் பிரார்த்திப்போம்.

கொல்லகுறிச்சி,
பூநகரி.

தாய், சகோதரர்கள்,
பேரன், பேத்தி, பெரியம்மா.

12192

# சுத்திகரிக்கப்படாத உப்புபாவனை!

## இது உடல் நலத்திற்கு தீங்குஎன எச்சரிக்கை

யாழ் குடாநாட்டில் தற்பொழுது 'தான் விளைவான உப்பு' உணவுத் தேவைக்கு பெருமளவு பயன்படுத்தப்படுவதாகவும் இதனால் வாந்திபேதி நெருப்புக்காய்ச்சல், சலரோகம், குடல்ரோகம், செங்கமாரி போன்ற பயங்கர நோய்கள் ஏற்படும் எனவும் தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய உற்பத்தி முகாமையாளர் திரு சிறி இராமநாதன் எச்சரித்துள்ளார்.

பெருக்குக் காலங்களில் கடல் நீர் மேடுகளில் இருக்கும் அழுக்குகளையும் சேர்த்து பள்ளங்களில் தேங்குகின்றது. பள்ளங்களில் தேங்கி நிற்கும் கடல்நீர் அழுக்கின் மேல் தெளிந்து சூரிய வெப்பத்தினால் நீர் ஆவியானதும் அழுக்கின் மேலும் அழுக்கைச் சுற்றியும் 'தான் விளைவான உப்பு' உற்பத்தியாகிறது.

தான் விளைவான உப்பில் சாதாரண உப்புடன் நமது பாவனைக்கு பயன்படுத்தக் கூடாத, செளக்கியத்திற்குப் பெரும் தீங்கு விளைவிக்கக் கூடிய ஜிப்சம் என அழைக்கப்படும் கல்சியம் சல்பேற்று, பேதி உப்பாகிய மக்னீசியம் சல்பேற்று, நச்சுத்தன்மை வாய்ந்த மக்னீசியம் குளோரைட்டுப்போன்ற வேறு உப்புக்களும் கலந்துள்ளன.

உப்பளங்களில் உற்பத்தி செய்யப்படும் உப்பில் இந்த பிற உப்புக்கள் நீக்கப்பட்டு, பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே விற்பனைக்கு விடப்படுகின்றது.

தான் விளைவான உப்பை உணவுக்கும் கருவாடு முதலிய தேவைகளுக்கும் பயன்படுத்துவதால் மிக இலகுவில் வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல், சலரோகம், குடல்ரோகம், செங்கமாரி ஏற்படும்.

இதனைக் கருத்திற் கொண்டே தான் விளைவான உப்பு சேகரித்தல், வைத்திருத்தல், பாவனைக்கு பயன்படுத்துதல் என்பவற்றுக்கு சட்டமூலம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவும் சிறி இராமநாதன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (74)

## 1990இல் உலகில் 30யுத்தங்கள்! அனேகமானவை உள்நாடுகளில்

இவ்வருடம் உலகில் 43 செய்தியாளர்கள் கடமையின்போது கொல்லப்பட்டுள்ளார்கள். உலகில் உள்ள 137 நாடுகளில் 61 நாடுகளில் மட்டுமே பத்திரிகைத் தணிக்கை நடைமுறையில் இல்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது 1990 இல் 38 யுத்தங்கள் நடைபெற்றுள்ளன. இவற்றில் அநேகமானவை உள்நாட்டு யுத்தங்கள் ஆகும் இவற்றில் தென்கிழக்கு ஆசியாவில் 13 யுத்தங்களும் ஆபிரிக்காவில் 12 யுத்தங்களும், மத்திய கிழக்கில் 6 யுத்தங்களும் நடந்ததாகத் தெரிய வருகின்றது.

## சோமவன்ச தப்பிச்செல்ல உதவிய கடற்படைப் பெண்அதிகாரி கைது

ஜே. வி. பியின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்க இந்தியாவுக்குத் தப்பிச்செல்ல உதவியதாகக் கருதப்படும் இருவரைப் புறக்கோட்டைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் கடற்படையைச் சேர்ந்த பெண் அதிகாரியாவார்.

சோமவன்சவுக்குப் புகலிடம் அளித்ததாகவும், தப்பிச்செல்ல உதவியதாகவும் இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## கைத்தொழில் உற்பத்தியில் நல்லூர் கூட்டுறவுச்சங்கம் ஈடுபடும்

விவசாயம், கைத்தொழில் உள்ளூர் உற்பத்தி என்பவற்றுக்கு அடுத்த ஆண்டில் முக்கியத்துவம் அளிக்க நல்லூர் பல நோ. கூ. சங்கம் தீர்மானித்துள்ளது.

இக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய சங்கத் தலைவர் பெ. கனகசபாபதி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

நிவாரணப் பொருட்களையும் அரசாங்கத்தால் வழங்கப்படும் பொருட்களையும் வழங்குவதில் மட்டும் கூட்டுறவுச்சங்கங்கள் தங்கியிருக்கக் கூடாது எனத் தெரிவித்த அவர் நெருக்கடியான காலத்தில் மக்களைப் பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்ற முன்னேற்பாடான திட்டங்களை வகுத்து போதிய அளவு உணவுப் பொருட்களை சேமித்து வைக்க நாம் அனைவரும் முனைப்புடன் செயற்படவும் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (66)

## அகதிகள் அதிகளவில்

மன்னார் சனிவிலேச்சில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் தங்கி உள்ளனர். சிறுச் சிறு கொட்டில்களில் இவர்கள் தங்கி உள்ளார்கள். வங்காலை, முருங்கன், பனங்கட்டிக் கொட்டு, தலைமன்னார், சிலாவத்துறை, முள்ளிக்குளம், நானாட்டன், போன்ற பகுதி அகதிகள் இங்கு உள்ளனர் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட வங்காலை அகதிகள் இங்கு தங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது' (17)

## ஐந்தரைலட்சம் ரூபா அபராதம்

ஜாம் டின் ஒன்றினுள் வைத்து இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை இந்தியாவிற்குக்

## குவைத்திலிருந்து திரும்பியோருக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை

குவைத்தில் சேவையாற்றிய இலங்கையர்களுக்கு உரிமையாக வேண்டிய வருமதிகள் பற்றி மதிப்பீடு செய்து உரிய நஷ்ட ஈட்டை வழங்க இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நஷ்ட ஈடுகள் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் மூலம் நியமிக்கப்படவுள்ள ஊழியர் நிவாரண நஷ்ட ஈட்டு நிதியிலிருந்தே பெறப்படவுள்ளது

தெற்கு ஆசிய நாடுகளின் உழைப்பாளிகளின் நஷ்ட ஈட்டு அளவைக் கணக்கிட்டுத் தமக்கு அளிக்குமாறு சர்வதேச தொழிலாளர் அமைப்பு இலங்கை அரசைக் கேட்டுள்ளன.

இது தொடர்பாக நஷ்ட ஈட்டு விண்ணப்பங்கள் குவைத்திலிருந்து நாடு திரும்பியோரிடமிருந்து வேலை வாய்ப்புப் பணியகத்தினால் கோரப்பட்டுள்ளன.

மாதிரி விண்ணப்பப் படிவத்தினை முரசொலி அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (11)

## கமத்தொழில் சேவைகளையும் மேற்கொள்ள கிராமசேவையாளருக்கு அமைச்சு பணிப்பு!

வைத்திய கலசம்.- 2

## வயிற்றோட்டம்

சில தவறான நம்பிக்கைகள்

வயிற்றோட்டம் பற்றியும், அதன் பராபரிப்புப் பற்றியும் பல தவறான நம்பிக்கைகள் எமது சமூகத்தில் பரவியிருக்கின்றன. இத்தகைய தவறான நம்பிக்கைகளை, விஞ்ஞான பூர்வமான தகவல்கள் மூலம் நிவர்த்திக்க வேண்டும்.

(i) வயிற்றோட்டம் 'தொங்கலால்' ஏற்படுகிறது எனப் பல தாய்மார்களும் தவறாக நம்புகிறார்கள். குழந்தை தற்செயலாக வாயில் போட்டுவிடும் தலைமுடி குடலில் தொங்கி விடுவதாகவும், அதனாலேயே வயிற்றோட்டம் ஏற்படுகிறது என நம்புகிறார்கள். இது தவறான கருத்து.

உண்மையில் உணவு அல்லது நீராகாரம் கிருமிகளால் (வைரஸ், பக்டீரியா, அமீபா) அசுத்தமடைந்து, நோயாளிக்கு கிருமி தொற்றுவதாலேயே (Infection) வயிற்றோட்டம் உண்டாகிறது. எனவே தற்சுகாதாரம், சுற்றாடல் சுகாதாரம், உணவுச் சுகாதாரம் ஆகியவற்றில் கவனம் எடுப்பது அவசியம் 'தொங்கலுக்குப் பார்ப்பதால்' எந்தவித பயனும் இல்லை.

(ii) 'குடிக்கக் குடுக்க குடுக்க கூடுதலாகப்போகிறது' எனப் பல தாய்மார்கள் கவலைப்படுவதுண்டு, சிலர் இன்னுமொரு படி மேலே போய் 'குடிக்கக் குடிக்க கூடுதலாக போகிறது' என்ற எண்ணத்தில் நீராகாரம் கொடுப்பதைக் குறைத்து விடுகிறார்கள் இவை தவறான கருத்து மாத்திரமல்ல ஆபத்தான நடவடிக்கையும் கூட.

உண்மையில் வயிற்றோட்டத்தின் போது நீராகாரம் கொடுத்தால் என்ன கொடுக்காவிட்டால் என்ன மலத்துடன் நீர் வெளியேறவே செய்யும். போதிய நீராகாரம் கொடுத்தால் அதில் ஒரு சிறு பகுதியாவது உடலில் சேரும் எனவே மேலதிக நீராகாரம் கொடுத்து நீரிழப்பு நிலை ஏற்படாது தவிர்க்க வேண்டும்.

(iii) 'எனது பால் குழந்தைக்கு ஒத்துக்கொள்ளவில்லை அதனால் குழந்தைக்கு அடிக்கடி நோய்கள் ஏற்படுகின்றன' என எண்ணிச் சில தாய்மார் குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டுவதை நிறுத்த முனைகிறார்கள் இதைவிடத் தவறான கருத்து எதுவுமே இருக்க முடியாது.

டொக்ரர் எம். கே. முருகானந்தன்

குழந்தைக்கு மிகவும் பொருத்தமான ஆகாரம் தாய்ப்பால்தான். தாய்ப்பால் குழந்தைகளுக்கு எந்தவித நோயையும் ஏற்படுத்துவதில்லை மாறாக பலவித நோய்கள் தொற்றுவதைத் தடுக்கும் சக்தி தாய்ப்பாலுக்கு இருக்கிறது. எனவே எக்காரணம் கொண்டும் தாய்ப்பாலை நிறுத்தக்கூடாது. வயிற்றோட்டத்தின் போது தாய்ப்பாலைத் தொடர்ந்து ஊட்டுவது அவசியம்.

(iv) வயிற்றோட்டம் ஏற்பட்டால் 'குடலைக் காயவிட வேண்டும்' குடலுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும் என்பது எமது சமூகத்தினரின் ஒட்டுமொத்தமான நம்பிக்கை.

உண்மையில் வயிற்றோட்டத்தின் போதுகூட உணவுகள் சமிபாடடைந்து உறிஞ்சப்படுகின்றன. குறைந்தது 2/3 பங்கு உணவாவது சமிபாடடைகிறது. எனவே வயிற்றோட்டத்தின் போதுகூட உணவு கொடுக்கலாம். ஆயினும் சமிபாட்டுக்குக் கடினமானதும் குடலை உறுத்தக்கூடியதுமான உணவுகளைத் தவிர்ப்பது நல்லது உதாரணமாக எண்ணெய்ப் பதார்த்தங்கள், காரமான உணவுகள். வாசனைச்சரக்குகள் நிறைந்த உணவுகள் ஆகியவற்றைத் தவிர்க்கலாம்.

(v) வயிற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தவென லோமோடில் (Lomotil), இமோடியம் (Immodium) போன்ற சில மருந்துகளைத் தாமாகவே பலர் பயன்படுத்துகிறார்கள். மருந்துக் கடைகளில் மாத்திரமின்றி பல கிராமப்புறச் சில்லறைக் கடைகளிலும்கூட 'மருந்துச் சிட்டை' (prescription) இன்றி விற்பனையாகின்றன.

இவை உண்மையில் வயிற்றோட்டத்தைக் குணமாக்கும் மருந்துகள் அல்ல. ஆனால் அடிக்கடி மலம் வெளியேறுவதைக் குறைக்கக்கூடும். எனினும் வெளியேறும் மலத்தின் அளவைக்

வைத்து இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை இந்தியாவிற்குக் கடத்த முயற்சித்த நபருக்கு 5½ இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தங்கமும் பறிமுதல் செய்யப்பட்டது.

இதற்கிடையில் 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான இத்தாலிய லிரா நோட்டுக்களை நாட்டுக்குள் கடத்திவர முற்பட்ட இலங்கையர் ஒருவர் சுங்கப் பகுதியினரால் கைது செய்யப்பட்டார் என அறிவிக்கப்படுகின்றது. (11)

## கிராமசேவையாளருக்கு அமைச்சு பணிப்பு!

சகல கிராம சேவையாளர்களும், பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள், விவசாய விசாலிப்பு சேவையாளர்கள் ஆகியோருக்குரிய கடமைகளையும் செய்தல் வேண்டுமென உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு பணித்துள்ளது.

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களாகவும், விவசாய விசாலிப்பு சேவையாளர்களாகவும் கடமையாற்றியவர்கள் விசேட திட்டத்தின் கீழ் சில மாதங்களுக்கு முன் கிராம சேவையாளர்களாகப் பதவி மாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

இதனால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்தே இந்த பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி தற்பொழுது கிராம சேவையாளர்களாகப் பணி புரியும் விசேட சேவை உத்தியோகத்தர்கள், பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள், விவசாய விசாலிபபு சேவையாளர்கள் ஆகியோர் கிராம சேவையாளர்களுக்குரிய கடமைகளுடன் தமது பகுதிகளுக்குரிய விவசாயத்துறை நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல் வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளது. (ப-11)

## வளர்ப்புப் பெற்றோரை நாடி 10,000 குழந்தைகள் பறந்தன!

கடந்த 13 வருடங்களில் பத்தாயிரம் இலங்கைக் குழந்தைகள் வெளிநாட்டவர்களால் வளர்ப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதாக உத்தியோக பூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உண்மையில் இத் தொகை மேலும் அதிகமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

தனியார் குழந்தைகளை வாங்கிவிற்கும் வியாபாரத்தில் ஈடுபடுவதைத் தடுக்கப் புதிய சட்டமூலம் கொண்டு வரப்படவுள்ளதாகக் குழந்தைகள் பாதுகாப்பு நன்நடத்தை ஆணையாளர் தெரிவித்தார்.

## இலங்கை வெற்றி பெற்றது

ஆசிய கிண்ணத்திற்கான இரண்டாவது ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டி, நேற்று முன்தினம் ஒரிஸ்ஸா மாநிலத்தில் கட்டாக் நகரில் இந்திய அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையில் நடைபெற்றபொழுது, இலங்கை அணி 36 ஓட்டங்களால் வெற்றி வாகை சூடியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.2 ஓவர்களில் 214 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தது.

வெற்றி இலக்கான 215 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடக் களத்தில் இறங்கிய இந்திய அணி துரிதகெதியில் ஒருவர் பின் ஒருவராக சகல விக்கற்றுகளையும் 45.5 ஓவர்களில் இழந்து 178 ஓட்டங்களை மாத்திரம்பெற்றதினால்தோல்வியைத்தழுவிக்கொண்டது 16

இவை உண்மையில் வயிற்றோட்டத்தைக் குணமாக்கும் மருந்துகள் அல்ல. ஆனால் அடிக்கடி மலம் வெளியேறுவதைக் குறைக்கக்கூடும். எனினும் வெளியேறும் மலத்தின் அளவைக் குறைக்காது. உதாரணமாக பத்துத்தரம் மலம் வெளியேறுவதை 5 தரமாகக் குறைக்கலாம். ஆனால் மலம் வெளியேறும் போது இடையில் கழியவேண்டிய மலமும் சேர்ந்து கூடுதலாகவே வெளியேறும்,

மலம் வெளியேறுவது தாமதமாவதால் நோயாளிக்குத் தீமையே ஏற்படுகிறது. மலத்துடன் வெளியேற வேண்டிய கிருமிகள் இம் மருந்துகளால் தாமதமாகவே வெளியேறுகின்றன. கிருமிகள் கூடிய நேரம் உடலில் இருப்பதால் நோய் மோசமடையலாம். எனவே இத்தகைய மருந்துகளைத் தவிர்க்க வேண்டும்.

இதேபோல் கேயோபெக்ஸ் (Koaopex), கொடேயின் (Codeine) அரோரூட் (Arrow root) போன்ற மருந்துகளும் தவிர்க்கப்பட வேண்டியவையே,

(vi) வயிற்றோட்டம் என்றவுடன் பலரும் அம்பிசிலின் (Ampicillin,) பக்ரிம் (Bactrim) பிளசில் (Flagyl) போன்ற நுண்ணியிர் கொல்லி மருந்துகளை உபயோகிக்கிறார்கள். பெருமபாலான வயிற்றோட்டங்கள் வைரஸ் கிருமிகளாலேயே உண்டாவதால் இம் மருந்துகளால் எவ்வித பிரயோசனமும் இல்லை; மாறாகத் தீங்கு ஏற்படலாம்.

வைத்திய ஆலோசனை ஆய்வு கூட மலப் பரிசோதனை ஆகியவற்றின் பின்னரே இவற்றை உபயோகிக்க வேண்டும்.

(vii) வயிற்றோட்டத்தின்போது குழந்தையைக் குளிப்பாட்டக்கூடாது என்பது இன்னுமொரு பிழையான நம்பிக்கை. காய்ச்சல், சளி போன்ற வேறு நோய்கள் இல்லாவிட்டால் குளிப்பாட்டலாம். உண்மையில் குளிப்பாட்டிச் சுத்தமாக வைத்திருப்பது அவசியம் இதன் மூலம் நோய்க் கிருமி ஏனையோருக்குத் தொற்றுவதைத் தடுக்கவும் குழந்தைக்கு வேறு நோய்கள் தொற்றுவதைத் தடுக்கவும் முடியும்.

கத்தோலிக்க ஆயர் பேரவையின் செய்தி

# 10 லட்சம் பேர் அகதிகளாக இருக்கையில் வளமான வாழ்வு பற்றி எப்படிப் பேசமுடியும்

இந்த நாட்டில் அகதி முகாம்கள் நிரந்தரமாகி வருகின்றன. அங்கே இரவும் பகலும் பயமும் பதற்றமும் நிலவுகின்றது. எம் மக்களில் சுமார் பத்து லட்சம் பேர் அகதிகளாகி இருக்கையில் நாம் எப்படி வளமான வாழ்வு பற்றி பேச முடியும். இவ்வாறு கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது அன்புக்குரியவர்களையும் வீடுகளையும் உடைமைகளையும் இழந்து தவிப்போருடைய கண்ணீரும் கம்லையும் நம் நெஞ்சை உருக்குகின்றன.

தம் உயிரைக்காப்பாற்ற அயல் நாடுகளில் தஞ்சம் கோரி பிறர் தயவில் வாழத் துணிந்தவர்கள் பலர் இந்த அவலத்திற்கு எந்த ஒரு சமூகமும் தப்பவில்லை.

தடுப்பு முகாம்களில் தம் இளமைக்காலத்தை வீணாக்கழிக்கும் இளைஞர்கள் பல்லாயிரம் பேர்.

ஒரு ஜனநாயக அமைப்பில் செயற்பட்டிருக்க வேண்டிய சாதாரண சட்டங்கள் செயலிழந்து போனதினால் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்.

உணவுக்கும், உடைக்கும், கல்விக்கும், வைத்தியத்துக்கும் செலவிட வேண்டிய பணத்தை துப்பாக்கிகளும் வெடிமருந்துகளும் உறிஞ்சுகின்றன.

இந்த நம்பிக்கையற்ற சூழ்நிலையிலும் மாறி மாறி வன்முறையில் ஈடுபட்டு நிலைமையை மோசமடையச் செய்யாதிருக்குமாறு இறைவன் பெயராலும் அல்லற்படும் மக்கள் பெயராலும் சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகிறோம்.

அவர்களை பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயல்வார்களாக.

பாராளுமன்றத்தில் நவரட்ணம் எம். பி.

## போருக்கு செலவாகும் பணம் சம்பள உயர்வுக்கு உதவும்

அரசின் கையாலாகாத்தன்மையால் தான் இன்று வடக்கு கிழக்கில் யுத்தம் நடைபெறுகிறது. அரசுதான் அமைதிச் சூழ்நிலையை ஏற்படுத்த முன் முயற்சியை எடுக்கவேண்டும். இவ்வாறு தமிழர் கூட்டணி எம். பி. கே. நவரத்தினம் பாராளுமன்றத்தில் கூறினார். தொடர்ந்து பேசிய அவர்;

தற்போது நடைபெறும் அநியாயச் சண்டைக்கு பயன்படுத்தும் பணத்தை தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வாக வழங்கலாம் பாதுகாப்புச் செலவுக்கு அநாவசியமாக பணத்தை ஒதுக்கி யுத்தம் செய்தால் அமைதியை ஏற்படுத்த முடியாது என்றார். (33)

## ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகள் யுனிசெப் வழங்கியது

மானிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு ''யூனிசெப்'' ஸ்தாபனம் அண்மையில் மருந்து வகைகள் வழங்கியது.

இவை சங்கானை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை. தொல்புரம் ஆஸ்பத்திரிகளுக்கு பங்கீடு செய்து வழங்கபபட்டுள்ளன. (13)

ஷெல்லுடன்...

யில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் மற்றையவரான மகேந்திரதாசன் சிவதாசன் (13) மானிப்பாய் ...

## அரிசி இன்றி விசேட நிவாரணம்

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சகலருக்குமான 2ம் கட்ட உலர் உணவு நிவாரணப் பொருட்கள் இவ் வாரம் தொடக்கம் வழங்கப்பட்டு ...

பாராளுமன்றத்தில் ரிச்சாட் பதிரன எம். பி.

## வடக்கு, கிழக்கு அடக்கு முறையே கண்டியில் பயன்படுத்தப்பட்டது

கண்டியில் ஜனநாயக ரீதியில் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் செய்ய முயன்றபோது வடக்கு கிழக்கு பகுதியில் நடைபெறும் அடக்கு முறையைப் பயன்படுத்தியுள்ளீர்கள் என சுதந்திரக்கட்சி எம்.பி. ரிச்சார்ட் பதிரன பாராளுமன்றத்தில் கூறினார்.

இதன் மூலம் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதை இது உணர்த்துகிறது. இவ்வாறான நடவடிக்கை மூலமாக நாட்டில் மீண்டும் பயங்காரவாதத்தை கட்டியெழுப்பப் பார்க்கின்றீகள் எனவும் அவர் சொன்னார்.

தொடர்ந்து பேசிய அவர் இன்று பாடசாலை மாணவர்கள் பலர் கைதிகளாக உள்ளனர் இவர்களின்கல்வி இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த நாட்டின் இன மதத்தின் பெயரால் இவர்கள் மீண்டும் கல்வி பயில அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

காயமுற்ற...

டுள்ளதாகவும், புலிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காகவே இந்தக் கைது நடவடிக்கை எனத் தமிழக அரசு கூறுகிறது.

இக் குற்றச் சாட்டில் எவ்வித அர்த்தமும் நியாயமும் இல்லை. ஏனென்றால் கைதானவர்கள் காயமுற்ற நோயாளிகள், கை, கால்களை இழந்த அங்கவீனர்கள், கண் தெரியாதவர்கள் இவர்களால் தமிழ் நாட்டிற்கும், இந்தியாவிற்கும் ஆபத்து ஏற்படப்போவதாகக் கூறுவது அர்த்தமற்றது சிரிப்புக்குஇடமானது.

ஈழத் தமிழினம் இரத்தம் சிந்தும் போதெல்லாம் தமிழகம் பொங்கி எழுவதுண்டு. தமிழுணர்வு, இனவுணர்வு, மனிதாபிமானவுணர்வு என்ற அடிப்படையில் தமிழகம் எமக்காகக் குரல் எழுப்பி வருகிறது. தமிழக மக்களின் ஆதரவும், அனுதாபமும் எமது உரிமைப் போராட்டத்திற்கு ஒரு உந்து சக்தியாக இருந்து வருகிறது. அத்தோடு எமது எதிரிக்கும் ஒரு அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது.

ஆனால் சமீபகாலமாகத் தமிழ் நாட்டில் புலிகளுக்கு எதிராகத் திட்மிட்ட பொய்ப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எமது விடுதலை இயக்கத்தை மாசு படுத்தி, நியாய பூர்வமான எமது மக்களின் விடுதலைப்போராட்டதை களங்கப்படுத்தி தமிழக மக்களைக் குழப்பிவிடும் நோக் ...

உயர் அதிகாரி...

அதிகாரி ஒருவர் கிளிநொச்சிக்கும் மாற்றப்படலாம் எனவும் ஊகிக்கப்படுகிறது.

இதேவேளை கூட்டுறவுத் துறையில் உயர் பதவியில் இருபபவர் வடகிழக்குமாகாண சபையில் முக்கிய பதவி ஏற்கவுள்ளார். (66)

தமிழக் ..

இந்திராகாங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ப. சிதம்பரம் குற்றஞ்சாட்டியது தொடர்பாகவே தமிழக முதல்வர் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

இதேவேளை தமிழக எதிர்க்கட்சித்தலைவி செல்வி ஜெயலலிதா ராஜீவ்காந்தி, பிரதமர் சந்திரசேகர் ஆகியோரை புதுடில்லியில் சந்தித்து தமிழக நிலைமைகள் குறித்து பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

யாழ்

சங்கங்கள் ஆற்றும்பணி மிகவும் பாராட்டக்கூடிய தொன்றாகும். இவர்களின் பங்களிப்பு தமிழ் ஈழம் கிடைக்கும் வரை தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்றார்.

யாழ் மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் குறிப்பிடுகையில் சிறிலங்கா அரசை நம்பியிராது கூட்டுறவுச் சங்கங்கள் உணவு ...

## லொறிகள் வருகின்றன விலைகளில் வீழ்ச்சி ஏற்படுகிறது

தென்பகுதியிலிருந்து யாழ் குடாநாட்டுக்கு உணவுப் பொருட்களுடன் லொறிகள் வரத்தொடங்கியதைத் தொடர்ந்து உணவுப்பொருட்களின் விலைகளில் மேலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

நேற்றைய தினம் குடாநாட்டில் சில இடங்களில் சீனி 42 ரூபாவாகவும் மண்ணெண்ணை 1 போத்தல் 35 ரூபாவாகவும் விற்கப்பட்டது.

இதேபோல பதுக்கிவைக்கப்பட்ட சீனி மூடைகளும் சவர்க்காரம் போன்ற பொருட்களும் நேற்று வெளிக்கு கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. (33)

### விடுதலைப் புலிகள் மாணவர் கலந்துரையாடல்

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் அங்கத்தவர்கட்கான மாதாந்தக் கலந்துரையாடல் திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது. (71)

எக்ஸ் - கதிரியக்க...

இயந்திரமும் பழமை வாய்ந்ததானதாக இருப்பதனால் குறிப்பிட்ட சில உடலுறுப்புகளை அதனால் துல்லியமாக படம் பிடிக்க முடியாதிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

### மண்ணெண்ணையில் நீர் கலப்பு இருவர் கைது

சங்கானை மத்திய சந்தையில் 15 கலன் நீர் கலந்த மண்ணெண்ணை விற்பனை செய்த இருவர் விடுதலைப் புலிகளிடம் நேற்றுக் காலை வசமாகமாட்டிக் கொண்டனர்.

இவ்விருவர்களும் பொதுமக்களை ஏமாற்றுவதற்காக நீரினுள் நீலநிறம் கலந்த நீரையே மண்ணெண்ணையில் கலந்து 40 ரூபாவாக குறைந்த விலையில் விற்பனை செய்தனராம். (ப-11)

### கலந்துரையாடல் இடமாற்றம்

நாவலர் வீதி, நாவலர் மண்டபத்தில் நடைபெறவிருந்த விடுதலைப் புலிகள் கலைகலாசார பிரிவும் நிதர்சன ஒலிபரப்புச் சேவையும் இணைந்து நடாத்தும் தமிழீழக் கலைஞர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (71)

### காலமானார்கள்

#### கணபதிப்பிள்ளை கண்மணி

நயினாதீவு மூன்றாம் வட்டாரம் காலஞ் சென்ற திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவி கண்மணி அவர்கள் 28. 12 90ல் நயினாதீவில் காலமானார். இவர் சண்முகநாதபிள்ளை (அதிபர் மத்தியகல்லூரி, யாழ்ப்பாணம்), சிவராமலிங்கம் (ஆசிரியர், நமச்சிவாய வித்தியாசாலை கொட்டடி, யாழ்ப்பாணம்), குமாரசூரியர் (பொருளாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு), மணிமேகலைராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மாசனிதேவி. பரமேஸ்வரி, காந்திமலர், சிவபாலன் (ஆசிரியர், ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம், நயினாதீவு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரது ஈமக் கிரியைகள் 30 12. 90 ஞாயிற்றுக் கிழமை நயினாதீவில் நடைபெறும்.

தகவல்:

3-ம் வட்டாரம், நயினாதீவு.

நாக. குமாரசூரியர்

12195

#### சுப்பிரமணியம் அன்னபூரணம் (பாக்கியம்)

சிகிச்சை பெற்று வருகின்றார் மற்றையவரான மகேந்திர தாசன் சிவதாசன் (13) மானிப்பாய் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ப-11, ப-2)

சகலருக்குமான 2ம் கட்ட உலர் உணவு நிவாரணப் பொருட்கள் இவ் வாரம் தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் அரிசி மாத்திரம் வழங்கப்பட வில்லை. (13)

பூர்வமான எமது மக்களின் விடுதலைப் போராட்டத்தை களங்கப்படுத்தி தமிழக மக் களைக் குழப்பிவிடும் நோக் குடன் பல்வேறு சக்திகள் இந்த அபாண்டமான பொய்ப் பிரசாரங்களில் ஈடு பட்டு வருகின்றன. (71)

நேயர் குறிப்பிடுகையில் சிறி லங்கா அரசை நம்பியிராது கூட்டுறவுச் சங்கங்கள் உணவு உற்பத்தி முயற்சிகளுக்கு ஊக் கம் கொடுத்து பொருளா தார ரீதியாக சிறப்பாகச் செயலாற்றுவது அவசியம் என்றார். (66)


# கணிதப் பிரிவு மாணவர்கட்கு
## (A/L 90, 91, 92)

திரு. நல்லையா திரு. கிருஸ்ணா

ஆகிய தரமான ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

(ஒவ்வொரு பிரிவிற்கும் மாதத்திற்கு 35 மணித்தியா லத்திற்கு குறையாத வகுப்புக்கள்)

மேலதிக விபரங்கட்கு!

## New Master Institute
## B. M. C. Lane - Jaffna

12197



# Science Academy
## NALLUR
## 90 A/L
## Chemistry - Paper
## Organic

ஆரம்பம்: 31-12-90 MONDAY 4-00 p. m.

## 91 A/L
## Physical Chemistry

ஆரம்பம்: 31 - 12 - 90 MONDAY 5-00 p. m.

## By
## சண்

12196


# சுப்பிரமணியம் அன்னபூரணம்
## (பாக்கியம்)

(கோண்டாவில் கிழக்கு - கோண்டாவில்)

தி மாலாயன் ரேடிங் கொம்பனி முன்னாள் உரிமை யாளரும், மலாயன் பென்சனியரும் ஆகிய காலம் சென்ற அ. சுப்பிரமணியத்தின் மனைவி அன்னபூரணம் (பாக்கியம்) 27. 12 90-ல் காலமானார். அன்னார் புவனராணி, இந்திராணி, விமலராணி, தபேந்திரன் (தவம்), தர்மேந்திரன், வசந்தராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினசபாபதி, தேவராசா, இராம நாதன், தனலட்சுமி, ஜமுனா சுமங்கலி ஆகியோரின் அன்பு மாமியாரும், திரு. திருமதி ரவிமோகன் யசோ தரா, திரு திருமதி விஸ்வநாதன் சுரபி, திரு. திருமதி இராமகிருஸ்ணன் சொரூபி, திரு. திருமதி விஜயசுந்தரம் தாமவதி, திரு. திருமதி நரேந்திரன் சுதாமதி, திரு திருமதி சுதன் யசோதை, திரு. திருமதி ரகு சுகன்யா, றணாமோகன், திரு. திருமதி ரவிக்குலன் தக்ஷா, கிருஷ்ணா, பவித்ரா, நிவேதன், த்திரியா, கவிதா, மதுரா ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், விபீஷா, ரதீஷா, கிருஷான் நிஸ்கலன், அபர்ணா, அஷான், துஷான் பிரமன், திரிஷான், வர்த்தனா, ரமணன் ஆகியோரின் பூட்டியும், திரு. திருமதி சுப்பிரமணியம் பரமேஸ்வரி, திரு. திருமதி தனவேந்தன் கமலாதேவி ஆகியோரின் வளர்ப்புத்தாயாரும் ஆவார். அன்னாரின் தகனக்கிரி யைகள் 27.12.90-ல் கோண்டாவிலில் நடைபெற்றன. இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும். சகல விதத்திலும் உதவியவர்களுக்கும் எமது நன்றிகள்.

தகவல்:

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். — பிள்ளைகள், மருமக்கள்.

12193


இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற் (லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்" இல் உள்ள அச்சகத்தில் 30-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.